# Slow Learner materials (Accountancy 5 Marks Theory Important Q & A)

**1.சரிக்கட்டுப் பதிவு** இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சேர்க்கப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை கணக்கேடுகளில் கொண்டுவருவதற்கு செய்யப்படும் குறிப்பேட்டுப் பதிவுகள் சரிக்கட்டுப் பதிவுகள் எனப்படும்.

**2.கூடியுள்ள வருமானம்:** ஈட்டிய வருமானம் உரிய கணக்காண்டில் பெறப்படாமலிருந்தால் கூடியுள்ள (பெறவேண்டிய) வருமானம் எனப்படும். எ.கா. பெற வேண்டிய வட்டி

**3.கொடுபட வேண்டிய செலவுகள்:** இறுதி கணக்குகள் தயாரிக்கப்படுகையில் உரிய செலவினங்கள் அந்த கணக்காண்டில் செலுத்தப்படாமல் இருந்தால் அது கொடுபட வேண்டிய செலவுகள் ஆகும். எ.கா. கொடுபட வேண்டிய வாடகை

**4.முன்கூட்டி செலுத்திய செலவுகள்:** செலவுகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டிருப்பின் அவை முன்கூட்டி (பயன்தீரா) செலவுகள் எனப்படும். எ.கா. முன்கூட்டி செலுத்திய வாடகை.

**5.முன்கூட்டி பெற்ற வருமானம்:**குறிப்பிட்ட கணக்காண்டில் பெற்ற வருமானம் எதிர் காலத்தில் செய்யப்பட வேண்டிய பணி சார்ந்ததாக இருப்பின் அது முன்கூட்டி பெற்ற வருமானம் எனப்படும். எ.கா. முன் கூட்டி செலுத்திய வாடகை.

**6.வாராக்கடன்:** கடனாளிகளிடமிருந்து திரும்ப பெறஇயலாத கடன் வாராக்கடன்.இது வியாபாரத்திற்கு இழப்பாகும்.

**7.வாரா ஐயக்கடன் ஒதுக்கு:** ஒவ்வொரு நிறுவனத்திலும் ஏற்கனவே போக்கெழுதப்பட்ட வாராக்கடனுக்கும் அதிகமாக ஒருகுறிப்பிட்ட சதவீதம் வாராக்கடன் நேர்வது இயல்பு.இருப்புநிலைக்குறிப்பில் பற்பல கடனாளிகளின் உண்மையானதொகையைக்காட்ட வேண்டுமெனில் வாராஐயக்கடன்ஒதுக்கு சரிக்கட்டப்பட வேண்டும்.

**8.கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு:** கடனாளிகள் உரிய நேரத்தில் பணத்தைச் செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு ரொக்கத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்குப் பின் மீதமுள்ள திடமான கடனாளிகள் உரிய நேரத்தில் பணத்தை செலுத்தி ரொக்கத் தள்ளுபடி பெற விரும்புவர்.

**9.கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு:** நிறுவனம் கடனீந்தோருக்கு தொகையை உரிய நாளில் செலுத்துவதால் ரொக்கத்தள்ளுபடி பெற இயலும். பற்பல கடனீந்தோர் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்காக கணக்கிடப்படுகிறது.

**10.ஒற்றைபதிவு முறை வரைவிலக்கணம் :** கோஹ்லர்- ஒற்றை பதிவு முறை என்பது ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளின் பதிவுகளை மட்டுமே வைத்திருக்கும் கணக்குப்பதிவியல் முறையாகும். இது சூழ்நிலைக்கேற்றவாறு மாறக்கூடிய எப்பொழுதும் முழுமை பெறாத இரட்டைபதிவு முறையாகும்.

**11.ஒற்றைபதிவுமுறையின் குறைபாடுகள்:** 1.இருப்பாய்வு தயாரிக்க முடியாது. 2.துல்லிய லாபம் கண்டறிய முடியாது. 3.உண்மையான நிதிநிலையை அறிய முடியாது. 4.வரிவிதிக்கும்அதிகாரிகள் ஏற்பதில்லை.5.கடன் பெறுவதில் இடர்பாடு.

**12.நிலையறிக்கை** : ஒற்றைப்பதிவு முறையில் முதலினை கண்டறிய தயாரிக்கபடுவதாகும் இது இருப்பு நிலைக்குறிப்பு போன்றது.

**13.நிலையறிக்கைமுறை/நிகரமதிப்பு முறை:** ஒற்றைப்பதிவுமுறையில் இலாபநட்டம் கண்டறிய பயன்படுத்த முறை

**14.மாற்றுதல் முறை:** ஒற்றை பதிவு முறையில் உள்ள பதிவுகளைக் கொண்டு வியாபாரக் க/கு, இலாபநட்ட க/கு தயாரிக்கப்படுவது மாற்றுதல் முறையாகும்.

**15.முழுமை பெறாத பதிவேடுகள்:** ஒற்றைப் பதிவு முறை பயன்படுத்தும் நிறுவனங்களில் பராமரிக்கப்படும் ஏடுகள்முழுமைபெறாதபதிவேடுகள் ஆகும்.இதில்ரொக்கம் மற்றும் ஆள்சார்கணக்குகள் மட்டுமே பதியப்படுகின்றன.

**16.தேய்மானம் :** கார்டர் அவர்களின் கூற்றுப்படி எக்காரணத்தினாலும் சொத்தின் மதிப்பில் உண்டாகும் படிப்படியான நிலையான குறைவே ஆகும்.

**17.நிலைச்சொத்து:** நீண்ட காலத்திற்கு பயனளிக்க கூடிய சொத்துக்கள் நிலைச்சொத்துக்கள் ஆகும். (எ.கா) நிலம், கட்டிடம், அறைகலன், இயந்திரம்.

**18.நடப்புச்சொத்துக்கள்:**ஒருவருடத்திற்குள் ரொக்கமாக்ககூடியசொத்துக்களைகுறிக்கிறது.(எ.கா)கைரொக்கம், வங்கி

**19..எறிமதிப்பு :** ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிந்தபிறகு அதை விற்றால் கிடைக்ககூடிய தொகையே எறிமதிப்பு.இதற்கு இறுதிமதிப்பு என்றும் பெயர்.

**20.வழக்கொழிவு :** புதியகண்டுபிடிப்புகள் முன்னேறிய செய்முறைகள் தொழில் நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக பழைய சொத்துகள் பயனற்றவை ஆகின்றன.

**21.காலப்போக்கு:** சொத்துக்களை பயன்படுத்தாவிட்டாலும் பருவ மாற்றம் காற்று மழை போன்ற இயற்கைக் காரணிகளாலும் மதிப்பு குறைகிறது.

**22.நேர்கோட்டு முறையில் தேய்மானம் :** சொத்தின் மொத்த அடக்க விலை மீது தேய்மானம் கணக்கிடுவதாகும். இம் முறையில் சொத்தின்வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட தொகையே ஆண்டுதோறும் தேய்மானமாக நீக்கப்படுகிறது.

**23.தேய்மானம் கணக்கீட்டும் முறைகள் 5:** 1.நேர்கோட்டு முறை 2.குறைந்த செல் மதிப்பு முறை 3.ஆண்டுத்தொகை முறை 4.தேய்மானநிதிமுறை 5காப்பீட்டுமுனைமமுறை 6.மறுமதிப்பீடுமுறை

**24.ஆண்டுத்தொகை முறை :** ஒரு நிறுவனம் தேய்மானம் காரணமாக தனது சொத்து மதிப்பை இழப்பதோடு அச்சொத்தைப் பெறுவதற்க்காகச் செலவிட்ட பணத்திற்கான வட்டியையும் இழக்கிறது ஆண்டுத்தொகை அட்டவணையை கொண்டு தேய்மானத்தொகை நிா்ணயிக்கப்படுகிறது.குத்தகை மீது தேய்மானம் கணக்கிட இம்முறை ஏற்றது.

**25.மறுமதிப்பீட்டு முறையில் தேய்மானம் :** இம் முறையில் விடு கருவிகள் போன்ற சொத்துக்களின் ஆண்டு இறுதி மதிப்பு ஆண்டு தொடக்க மதிப்போடு ஒப்பிடப்படுகிறது. இரண்டுக்குமுள்ள வேறுபாடு தேய்மானமாக கருதப்படுகிறது.

**26.காப்பீட்டு முறையில் தேய்மானம்:** இம் முறையில் சொத்து காப்பீடு செய்யப்பட்டு முனைமம் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத் தொகை முனைமமாக செலுத்தப்படுகிறது. காப்பீட்டுக் காலம்முடியும்போது தொகைபெறப்பட்டுபழையசொத்துக்கு பதிலாக புதியசொத்து வாங்கவகை செய்யப்படுகிறது.

**27.விகிதம் :** ஓா் இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்க கூடிய உறவினை எளிய கணிதவியல் முறையில் கூறுவதை விளக்குகிறது. – கென்னடி மற்றும் மேக்மீலன்.

**28.நடப்பு விகிதம்:** ஒரு நிறுவனத்தின் நடப்புப் பொறுப்புகளை எதிர்நோக்கும் திறனை அளவிட உதவுகிறது. நடப்பு சொத்துக்கள் மற்றும் நடப்பு பொறுப்புக்களுக்கிடையேயான உறவாகும்.

**29.இயக்க விகிதம்:** வணிக நிறுவனத்தின் இயக்கத் திறனை நிா்ணயிக்கிறது. இயக்கச் செலவுக்கும் விற்பனைக்கும் இடையேயான உறவினை கூறுவதாகும்.

**30.நிதி நிலைபகுப்பாய்வின் முக்கியத்துவம்** 1.வணிக நிறுவனத்தின் ஈட்டும் திறன் அல்லது லாபத்தன்மையை கணித்தல் 2.வணிக நிறுவனத்தின் குறுங்கால மற்றும் நீண்ட கால வகையுடைமையை ஆய்வு செய்தல்.3.பல்வேறு அமைப்புகளுக்கு இடையேயான ஒப்பு நோக்கு ஆய்வினை மேற்கொள்ள உதவுதல்4.திட்டப்பட்டியல் தயாரிக்க உதவுதல்

**31.வகையுடைமை விகிதங்கள்** நிறுவனத்தின் நீண்ட கால கடன்களை எதிா்நோக்கும் திறனை குறிக்கிறது. நிறுவனம் எவ்வாறு நீண்ட கால பொறுப்புகளை எதிா்கொள்கிறது என்பதை உணர உதவுகிறது .1) புற அக பொறுப்புகள் விகிதம் 2) உரிமையாளா் விகிதம்

**32.செயல்பாட்டு விகிதங்கள்: 1.**முதல் விற்பனை விகிதம், 2.நிலை சொத்து விற்பனை விகிதம், 3.சரக்கிருப்பு விற்பனை விகிதம், 4.கடனாளிகள் விற்பனை விகிதம், 5.கடனீந்தோா் கொள்முதல் விகிதம்.

**33.முதல் விற்பனை விகிதம்:** இவ்விகிதம் எத்தனை முறை வணிகத்தில் முதல் சுழல்கிறது என்பதை மடங்காக கூறுவதாகும். விற்பனைக்கும்,பயன்படுத்திய முதலுக்கும் இடையேயானஉறவினை குறிக்கும் விகிதமாகும்.

**34.கடனாளிகள் விற்பனை விகிதம்:** கடன் விற்பனைக்கும் கணக்குமூலமாக பெற வேண்டியவைகளின் சராசரிக்கும் இடையேயான உறவினை எடுத்துரைப்பது. கடனாளிகளிடமிருந்து நிறுவனம் பெற வேண்டிய தொகையை வசூலிக்கும் திறனை விளக்குகிறது.

**35.புற அக பொறுப்பு விகிதம்:** நிறுவனத்தின் நீண்டகால நிதிநிலையின் வகையுடைமையை கணிக்க உதவுகின்றது. மொத்த நீண்ட காலக்கடன் மற்றும் பங்குதாரா்களின் நிதிக்கான உறவை உணா்த்துகிறது.

**36.ரொக்க திட்ட பட்டியல் இலக்கணம்:** எதிா்காலத்தில் நிகழக்கூடிய வரவு மற்றும் செலவுகளை உள்ளடக்கிய கணக்காகும் - லாங்மென் வணிகவியல்சாா்ஆங்கில அகராதி

**37.ரொக்க திட்ட பட்டியல் தயாரிப்பு முறைகள்:** 1.பெறுதல் மற்றும் செலுத்துதல் முறை, 2.சரிக்கட்டபட்ட இலாப நட்ட கணக்கு முறை (அ) ரொக்கஓட்ட முறை, 3.இருப்புநிலைக் குறிப்பு முறை.

**38.ரொக்க செலுத்துதல் உதாரணம் :** (1)ரொக்க கொள்முதல் (2)சரக்களித்தோருக்கு செலுத்தக்கூடிய தொகை(3)கூலி அலுவலக செலவுகள் விற்பனை செலவுகள் போன்ற வணிக செலவுகள் (4)செலுத்த வேண்டிய வட்டி வருமான வரி பங்காதாயம் போன்றவை (5)சொத்துக்களை வாங்குதல் 6.கடனை திரும்ப செலுத்தல்.

**39.ரொக்க பெறுதல்கள் உதாரணம் :** 1.ரொக்க விற்பனை, 2.வாடிக்கையாளா்களிடமிருந்து பெறக்கூடிய தொகை, 3.வட்டி கழிவு பங்காதாயம் போன்ற வணிக வரவுகள். 4.சொத்து விற்றது. 5.பங்குகள் மற்றும் கடனீட்டு பத்திரம் மூலம் பெறப்படும் தொகை 6. பெற்ற கடன்

**40.திட்டபட்டியல் தன்மைகள்:** திட்டப்பட்டியல் எதிகாலம் குறித்து முன்னரே தயாரிக்கக் கூடியவை ஆகும். இது பணம் அல்லது அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் தெரிவக்கக்கூடியவை ஆகும் இது திட்ட இலக்கை அடைவதற்கான வழி

**41.திட்டப்பட்டியல் நன்மைகள்:** (1)போதுமான ரொக்க இருப்பை பேண உதவுகிறது.(2)இது மேலாண்மைக்கு பயனளிக்கும் வகையில் செய்திகளை அளிக்கிறது. (3)நிதித் தேவையை பூர்த்தி செய்யும்திட்டம் தீட்ட (4)ரொக்க இருப்பை கட்டபடுத்த உதவுகிறது

**42.ரொக்கதிட்டப்பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகள் நிலை1** தொடக்கரொக்கயிருப்பை எடுத்துக்கொள்க. **நிலை2** அம் மாதத்தில் பெறவேண்டிய அனைத்து ரொக்கப் பெறுதல்களை மதிப்பிட்டுக் கூட்டுக **நிலை3** அம்மாதத்தின் மொத்த ரொக்கயிருப்பை கணக்கிடுக **நிலை4** அம்மாதத்தின் மொத்த ரொக்க செலுத்துதல்களை கழிக்க **நிலை 5** இறுதி ரொக்கயிருப்பை கணக்கிடுக.

**43.கூட்டாண்மையின் வரைவிலக்கணம்:** இந்திய கூட்டாண்மை சட்டம் 1932 பிரிவு 4ன் படி அனைவருமோ, அனைவரின் சார்பில் அவர்களில் எவரோ, ஒரு தொழிலை நடத்தவும், அதில் ஏற்படும் இலாபத்தை பகிர்ந்து கொள்ளவும் உடன்பட்டு அந்த நபர்களிடையே ஏற்படும் உறவு ஆகும்

**44.கூட்டாண்மை சிறப்பியல்புகள்:**1) இரண்டும் அதற்கு மேற்பட்ட நபர்கள் கொண்ட குழுமம். 2) கூட்டாளிகளிடைய உடன்பாடு3)இலாபப் பங்கேற்பு4)சட்டப்படியான தொழில் 5)அனைவருமோ (அ) அவர்களில் எவருமோ தொழில் செய்தல்

**45.ஆதாய விகிதம்:** தொடரும் கூட்டாளிகள் வெளிச் செல்லும் கூட்டாளியின் பங்கினைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகும். ஆதாய விகிதம் = புதிய இலாப பகிர்வு – பழைய இலாப பகிர்வு

**46.தியாக விகிதம்:** பழைய கூட்டாளிகள் புதிய கூட்டாளிக்கு அவர்கள் இலாபத்தின் ஒரு பகுதியினை வழங்க ஒப்புக்கொண்ட விகிதமே. தியாகம் = பழைய பங்கு - புதிய பங்கு.

**47.மாறுபடும் முதல்:** ஒரே ஒரு க/கு அதாவது கூட்டாளிகளின் முதல் க/கு மட்டுமே தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் அனைத்து சரிக்கட்டுதல்களும் பதியப்படுகின்றன. எனவே இருப்புகள் ஆண்டுதோறும் மாறுபடும்.

**48.நிலைமுதல் முறை:** முதல்தொகை எப்போதும் நிலையாக இருக்கும். இம்முறையில் முதல்கணக்கு, நடப்புகணக்கு என இரு கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

**49.குவிந்த காப்பு:** நிறுவனத்தின் இலாபத்தின் ஒரு பகுதி எதிர்பாரமல் ஏற்படும் நட்டங்கள் மற்றும் இழப்புகளைச் சரிக்கட்ட ஒதுக்கீடு செய்கின்றனர். இதுவே பொதுக்காப்பு, என அழைக்கப்படுகிறது.

**50.உயர் இலாபம்:** சராசரி லாபத்திற்கும் சாதாரண லாபத்திற்குமிடையே உள்ள வேறுபாடே உயர் லாபம் ஆகும். இது நற்பெயர் கணக்கிட உதவுகிறது.

**51.நற்பெயர்:**நற்பெயர் என்பது நிறுவனம் வாடிக்கையாளருக்கு செய்துள்ள சிறந்த சேவை மற்றும் பொருட்களின் தரத்தினை அடிப்படையாக கொண்டு ஈட்டியுள்ள மதிப்பின் அளவீடு ஆகும். நற்பெயர் ஒரு புலனாக சொத்து. ஆனால் கற்பனை சொத்து அல்ல.

**52.நற்பெயர் கணக்கிடும் முறைகள்:** 1.சராசரி இலாப முறை, 2.உயர் இலாப முறை, 3.மூலதனமாக்க முறை

**53.உயர் இலாப முறையில் நற்பெயரை கணக்கிடுதல்:** சாதாரண இலாபத்தை விட கூடுதலாக பெறக்கூடிய சராசரி இலாபமே உயர்இலாபம்எனப்படுகிறது.உயர்இலாபத்தை கொள்முதல்ஆண்டுகளால்பெருக்கினால்நற்பெயர் கணக்கிடலாம்.

**54.மறுமதிப்பீடு கணக்கு:** மறுமதிப்பீடு என்பது கூட்டாண்மை நிறுவனம் மாற்றியமைக்கும் போது அதன் சொத்துக்களையும், பொறுப்புகளையும் மதிப்பீடு செய்வதாகும்.

**55.விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு:** சில விண்ணப்பதாரர்களுக்கு விண்ணபித்த பங்குகளைவிட சில பங்குகள் குறைவாக ஒதுக்கீடு செய்யப்படும். மிகையான விண்ணப்பத்தொகையை திரும்ப அளித்தலுக்கு பதில் ஒதுக்கீட்டுத் தொகைக்கு சரிக்கட்டிக் கொள்ளப்படும்.

**56.பங்கு ஒறுப்பிழப்பு:** பங்குதாரர்கள் அழைப்பு தொகை செலுத்த தவறும் போது அவர்களின் பங்கு ஒதுக்கீட்டினை ரத்து செய்வதாகும். பங்குநர்கள் நிறுமத்தின் உறுப்பினராக இருக்க முடியாது.

**57.அழைப்பு முன்பணம்:** ஒரு விண்ணப்பதாரர் நிறுமம் அழைத்த தொகையை விட அதிகமாக செலுத்தினால் மிகையாக செலுத்தப்பட்டதொகை அழைப்புமுன்பணம்

**58.அழைப்பு நிலுவை:** சில நேரங்களில் பங்குதாரர்கள் அழைப்புத் தொகையை செலுத்தத் தவறிவிடுவர். நிறுமம் விடுத்த அழைப்புகள் மீது பெறப்படாத தொகையின் மொத்தம் அழைப்பு நிலுவை ஆகும்.

**59.காப்பு முதல்:** ஒரு நிறுமம் அதன் கலைப்பின் போது மட்டும் அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள அழைக்கப்படாத முதலின் ஒரு பகுதியே காப்பு முதல்.. இதனை நிறுமத்தின் இருப்புநிலைக்குறிப்பில் காாண்பிப்பதில்லை.